[1979 மார்ச் 13

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சித் துறையினரால் நடத்தப்படுகின்ற விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு சலுகை அளிக்கப்படுமா என்று கேட்ட கேள்விக்கு ஏற்கனவே, நான் விடை அளித்திருக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாட்டிலே பஞ்சாலைத் தொழிலாளி ரூ. 900 சம்பளம் வாங்குகிறார். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்கள் ரூ. 500 சம்பளம் என்றாலும், ரூ. 250 தான் சம்பளமாகப் பெறுகிறார்கள் என்பது தெரியும். எனவே, இதைப்பற்றி மறுபடியும் அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்கள் ஒரு சிறந்த உண்மையை, மகிழ்ச்சிகரமான செய்தியை, அதாவது நம்முடைய மாநிலத்தில் பஞ்சாலைத் தொழிலாளிகள் ரூ. 900 சம்பளம் வாங்குகிறார்கள் என்ற செய்தியை, இந்தக் கேள்வியின் மூலம் நாட்டிற்கு அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி. நம்முடைய சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளிலே குறைந்த வசதிகள், குறைந்த படுக்கைகளே இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் இந்த விடுதிகளை எதிர்நோக்கி வருகின்றபோது, அவர்களுக்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே அமைக்கப்பட்ட இந்த விடுதிகளில், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கு வருகின்ற நேரங்களில் ஒருவேளை வசதி செய்ய முடியாமல் போக நேருமோ என்ற அடிப்படையில்தான், அப்படிப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு இயலாது என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கருதுகிறது.

மங்களமேடு அருகில் உள்ள ரஞ்சன் கோட்டை.

(* வினா எண். 365—) திரு. எஸ். வி. இராமசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், மங்கள மேடு அருகில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிகு ரஞ்சன் கோ யினை சுற்றுலாத்தலம் ஆக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) இப்பெருங்கோட்டையினை வேறு வகையில் பயன்படுத்திட ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) இல்லை.

(அ) எதுவும் இல்லை.

1979 மார்ச் 13]

திரு. எஸ். வி. இராமசாமி : தலைவர் அவர்களே, இராபர்ட் கிளைவ், திப்பு சுல்தான் போன்றவர்களால் கட்டப்பட்டு, உண்மையிலேயே புராதானமாக இருக்கின்ற இந்தக் கோட்டையை 'புரொடெக்டட் மான்யூமென்ட்' என்பதாக பராமரித்து, அதற்கு அருகாமையில், சுற்றியுள்ள 100 ஏக்கர் பரப்பளவில் அரசு பழத் தோட்டம் வைப்பதற்கோ அல்லது அந்த இடத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கவோ பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோட்டையைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தால், அது பயனுற்றதாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தக் கோட்டை திருச்சி—சென்னை நெடுஞ்சாலையில் 67 கிலோ மீட்டர் திருச்சியிலிருந்தும், இந்த இடத்திற்கு தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரம் உள்ளே செல்ல வேண்டும். இந்தக் கோட்டையானது 100 அடி உயரமுள்ள ஒரு பாறையின் மீது அழகுடன் அமைந்துள்ளது. கோட்டையின் மொத்தப் பரப்பளவு ஏறத்தாழ 88 ஏக்கர் ஆகும். இக்கோட்டையின் ஒருபுறம் சின்ன ஆறு ஓடுகிறது. இக்கோட்டை ஒரு பாதுகாப்பு அரணாக கட்டப்பட்டிருப்பது கோட்டையின் அமைப்பு முறையிலிருந்தும், அமைந்துள்ள இடத்தைப் பொருத்தும் விளங்குகின்றது. இக்கோட்டையைச் சுற்றி 70 அடி அகலமும், 15 அடி ஆழமும் கொண்ட அகன்ற அகழியானது வெட்டப்பட்டுள்ளது. கோட்டையின் மதில் சுவர்களிலும், கோட்டையின் உச்சிப் பகுதிகளிலும் எதிரிகளை மறைந்திருந்து தாக்குவதற்காக ஏற்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கோட்டையில் நிதி வைப்பு ரகசிய அறைகளும், கருவறைகளும், வற்றாத ஊற்றுகளும், பெண்கள் குளிப்பதற்காக தனிக் குளங்களும், ஆபத்துக் காலங்களில் வெளியேறுவதற்காக ரகசிய வழிகளும் நிறைந்து, பார்ப்போரை பல நூற்றாண்டுகளுக்குப் பின் நோக்கி இழுத்துச் செல்லும் கற்பனையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது இந்தப் பகுதி, மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ் இருக்கிறது.

[முற்பகல் 9.30]

அது ஒரு 400 ஆண்டுகளுக்கு முன்னால் மராட்டிய மன்னர் வழியில் வந்த ரஞ்சித்சிங் என்பவரால் கட்டப்பட்டு அவருடைய பெயரில் இந்தக் கோட்டை விளங்குகிறது. தமிழ்நாடு சுற்றுலாத் துறை மிக விரைவில் அந்தப் பகுதியை நம்முடைய மக்களுடைய கவனத்தை ஈர்க்கும் வகையில் சுற்றுலா ஸ்தலமாக ஆக்குவதற்கான வழிவகைகளுக்கான விவரங்களைத் தரும்படி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.